وَالْاَرْضِ وَمَا طَحٰىهَا ۝۶ وَنَفْسٍ وَّمَا سَوّٰىهَا ۝۷ فَاَلْهَمَهَا فُجُوْرَهَا
وَتَقْوٰىهَا ۝۸ قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰىهَا ۝۹ وَقَدْ خَابَ مَنْ دَسّٰىهَا ۝۱۰
كَذَّبَتْ ثَمُوْدُ بِطَغْوٰىهَآ ۝۱۱ اِذِ انْۢبَعَثَ اَشْقٰىهَا ۝۱۲ فَقَالَ لَهُمْ
رَسُوْلُ اللّٰهِ نَاقَةَ اللّٰهِ وَسُقْيٰهَا ۝۱۳ فَكَذَّبُوْهُ فَعَقَرُوْهَا فَدَمْدَمَ
عَلَيْهِمْ رَبُّهُمْ بِذَنْۢبِهِمْ فَسَوّٰىهَا ۝۱۴ وَلَا يَخَافُ عُقْبٰهَا ۝۱۵ ع ۱۵ ۱۶

## سُوْرَةُ الَّيْلِ مَكِّيَّةٌ وَّهِيَ اِحْدٰى وَعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

وَالَّيْلِ اِذَا يَغْشٰى ۝۱ وَالنَّهَارِ اِذَا تَجَلّٰى ۝۲ وَمَا خَلَقَ الذَّكَرَ
وَالْاُنْثٰۤى ۝۳ اِنَّ سَعْيَكُمْ لَشَتّٰى ۝۴ فَاَمَّا مَنْ اَعْطٰى وَاتَّقٰى ۝۵
وَصَدَّقَ بِالْحُسْنٰى ۝۶ فَسَنُيَسِّرُهٗ لِلْيُسْرٰى ۝۷ وَاَمَّا مَنْۢ
بَخِلَ وَاسْتَغْنٰى ۝۸ وَكَذَّبَ بِالْحُسْنٰى ۝۹ فَسَنُيَسِّرُهٗ
لِلْعُسْرٰى ۝۱۰ وَمَا يُغْنِيْ عَنْهُ مَالُهٗۤ اِذَا تَرَدّٰى ۝۱۱ اِنَّ عَلَيْنَا
لَلْهُدٰى ۝۱۲ وَاِنَّ لَنَا لَلْاٰخِرَةَ وَالْاُوْلٰى ۝۱۳ فَاَنْذَرْتُكُمْ نَارًا
تَلَظّٰى ۝۱۴ لَا يَصْلٰىهَاۤ اِلَّا الْاَشْقَى ۝۱۵ الَّذِيْ كَذَّبَ وَتَوَلّٰى ۝۱۶
وَسَيُجَنَّبُهَا الْاَتْقَى ۝۱۷ الَّذِيْ يُؤْتِيْ مَالَهٗ يَتَزَكّٰى ۝۱۸

6. பூமியின்மீதும் _ அதை விரித்தவன்மீதும் சத்தியமாக_
7. ஆத்மாவின்மீதும்_ அதனைச் செவ்வையாக்கியவனின் மீதும் சத்தியமாக_
8. பின்னர், அதற்கு அதன் தீமையையும், அதற்குரிய நன்மையையும் உணர்த்தினான்.
9. எவர் (ஆத்மாவாகிய) அதை பரிசுத்தமாக்கிக் கொண்டாரோ அவர், திட்டமாக வெற்றியடைந்துவிட்டார்.
10. இன்னும், எவர் அதனை(ப்பாவத்தைக்கொண்டு) களங்கப்படுத்திவிட்டாரோ, அவர் திட்டமாக நஷ்டமடைந்துவிட்டார்.
11. ஸமூது (கூட்டத்தினர் ஸாலிஹ் நபியை) தங்கள் அக்கிரமத்தால் பொய்யாக்கினார்கள்.
12. அக்கூட்டத்திலுள்ள மிக துர்பாக்கியமுடையவன் விரைந்துமுன்வந்த பொழுது_
13. அல்லாஹ்வின் தூதர் (ஸாலிஹ் நபி,) அ(ந்த ஸமூதுகூட்டத்த)வர்களிடம்: "அல்லாஹ்வுடைய பெண்ஒட்டகத்தை(இம்சிப்பதை)யும் அது தண்ணீர் அருந்துவதையும் (விட்டுவிடுங்கள்)" என்று கூறினார்.
14. பின்னர், அவர்கள் அவரைப் பொய்யாக்கி,(அதன் கால் நரம்பைத்தறித்து) அதை அறுத்து விட்டனர்; ஆகவே, அவர்களின் இரட்சகன் அவர்களுடைய (இந்தப்) பாவத்தின் காரணமாக, அவர்களின் மீது (மண்ணோடுமண்ணாகிவிடும்) கடும் வேதனையை இறக்கிவைத்து, பிறகு அதனை (ச்சகலருக்கும்) சமமாக்கினான்.
15. அதனுடைய முடிவைப்பற்றியும் அவன் பயப்படவில்லை.

---

அத்தியாயம் : 92

## அல்லைல் _ இரவு

வசனங்கள் : 21 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. இரவின்மீது சத்தியமாக_ அது(தன் இருளால்) மூடிக்கொள்ளும்போது _
2. பகலின் மீது சத்தியமாக_அது(தன் பிரகாசத்துடன்)வெளிப்படும்போது_
3. ஆணையும், பெண்ணையும் படைத்தவ(னாகிய அல்லாஹ்வின் மீது சத்தியமாக_
4. (மனிதர்களே!) நிச்சயமாக உங்களுடைய முயற்சி பலதரப்பட்டதாகும்.
5. ஆகவே, எவர் (தன் செல்வத்தை நன்மையானவற்றுக்கு) வழங்கி இன்னும், (அல்லாஹ்வுக்குப்)பயந்து_
6. இன்னும், (இம்மார்க்கத்திலுள்ள) நல்ல காரியங்களை (நல்ல காரியங்களென) உண்மையாக்கிவைக்கின்றாரோ அவர்;
7. அவருக்கு இலேசானதற்கு(சுவர்க்கத்தின் வழியை) நாம் எளிதாக்கி வைப்போம்.
8. ஆகவே, எவர் உலோபத்தனமும் செய்து (அல்லாஹ்விடமிருக்கும் நற்பேறுகளை விட்டும் தன்னை) தேவையற்றவரா(கக் கருது)கிறாரோ_
9. (இம்மார்க்கத்திலுள்ள) நல்லவற்றை பொய்ப்படுத்தியும் வைத்தாரோ அவர்;
10. அப்போது அவருக்கு கஷ்டத்திற்கு(நரகவழிக்கு) நாம் எளிதாக்கி வைப்போம்.
11. மேலும், அவர் (நரகத்தில்) வீழ்ந்து விட்டால், அவருடைய செல்வம் அவருக்கு பயனளிக்காது.
12. நிச்சயமாக நேர்வழி காட்டுதல் நம்மீது (பொறுப்பாக) இருக்கிறது.
13. நிச்சயமாக பிந்தியதும்,(மறுமையும்) முந்தியதும்(இம்மையும்) நமக்கே உரியவையாகும்.
14. ஆகவே, (மனிதர்களே!) கொழுந்துவிட்டெரியும்(நரக)நெருப்பைப்பற்றி நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரித்துவிட்டேன்.
15. மிக்க துர்பாக்கியமுடையவரைத்தவிர (மற்றெவரும்) அதில் புகமாட்டார்.
16. அவர் எத்தகையவரென்றால் (நம் தூதர்கள் கொண்டுவந்த சத்தியத்தைப்) பொய்யாக்கி, புறக்கணித்தும் விட்டார்.
17. மேலும், மிகுந்த பயபக்தியுடையவர் அதிலிருந்து வெகு தூரத்தில் ஆக்கப்படுவார்.
18. அவர் எத்தகையவரென்றால், (பாவத்திலிருந்து தன்னைப்) பரிசுத்தமாக்கிக் கொண்டவராக, தன்னுடைய செல்வத்தை தர்மமாகக் கொடுப்பார்.

وَمَا لِاَحَدٍ عِنْدَهٗ مِنْ نِّعْمَةٍ تُجْزٰٓى ۝١٩ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ
رَبِّهِ الْاَعْلٰى ۝٢٠ وَلَسَوْفَ يَرْضٰى ۝٢١ ع ١ ٢١ ١٧

## سُوْرَةُ الضُّحٰى مَكِّيَّةٌ وَّهِىَ اِحْدٰى عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

وَالضُّحٰى ۝١ وَالَّيْلِ اِذَا سَجٰى ۝٢ مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلٰى ۝٣
وَلَلْاٰخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْاُوْلٰى ۝٤ وَلَسَوْفَ يُعْطِيْكَ رَبُّكَ
فَتَرْضٰى ۝٥ اَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَاٰوٰى ۝٦ وَوَجَدَكَ ضَآلًّا
فَهَدٰى ۝٧ وَوَجَدَكَ عَآئِلًا فَاَغْنٰى ۝٨ فَاَمَّا الْيَتِيْمَ فَلَا تَقْهَرْ ۝٩
وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنْهَرْ ۝١٠ وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ۝١١ ع ١ ١١ ١٨

## سُوْرَةُ الشَّرْحِ مَكِّيَّةٌ وَّهِىَ ثَمَانِ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ ۝١ وَوَضَعْنَا عَنْكَ وِزْرَكَ ۝٢
الَّذِىْٓ اَنْقَضَ ظَهْرَكَ ۝٣ وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ ۝٤ فَاِنَّ مَعَ
الْعُسْرِ يُسْرًا ۝٥ اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ۝٦ فَاِذَا فَرَغْتَ فَانْصَبْ ۝٧
وَاِلٰى رَبِّكَ فَارْغَبْ ۝٨ ع ١ ٨ ١٩

19. (மனிதர்களில்) எவருக்கும் (தன் தர்மத்தின் மூலம் பிரதிபலனைக் கருதிக்) கொடுக்கப்படும் எந்த உபகாரமும் தம்மிடம் இல்லை;
20. மிக்க மேலான தம் இரட்சகனின் முகத்தைத் தேடியே தவிர (வேறு எந்த நோக்கத்துடனும் அவர் செலவுசெய்யவில்லை).
21. மேலும், (தம் இரட்சகனின் நற்கூலியைக்கொண்டு வெகுவிரைவில்) அவரும் திருப்தியடைவார்.

அத்தியாயம் : 93

## அள்ளுஹா _ முற்பகல்

வசனங்கள் : 11 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. முற்பகல் மீது சத்தியமாக!
2. (இருண்ட) இரவின் மீதும் சத்தியமாக_அது ஒடுங்கிவிட்டால்_
3. (நபியே!) உமதிரட்சகன் உம்மைக் கைவிடவில்லை; (உம்மை) அவன் வெறுக்கவுமில்லை.
4. மேலும், (மறுமையெனும்) பிந்தியதானது (இம்மையெனும்) முந்தியதைவிட உமக்கு மிகச் சிறந்ததாகும்.
5. இன்னும், உமதிரட்சகன் அடுத்து (ப்பல உயர்பதவிகளை) உமக்கு அளிப்பான்; அப்போது நீர் திருப்தியடைவீர்.
6. உம்மை அவன் அநாதையாகக் கண்டுகொள்ளவில்லையா? ஆகவே, (அரவணைப்புப் பெற்று நீர் ஆறுதல் பெற) அவன் இடம் அளித்தான்.
7. மேலும், (வேதம் என்ன மார்க்கம் என்னவென்பதைப்பற்றி) தெரியாதவராக உம்மை அவன் கண்டான்; ஆகவே (அதற்கு) அவன் (உமக்கு) வழி காட்டினான்.
8. மேலும், தேவையுடையவராக அவன் உம்மைக் கண்டான்; ஆகவே, (உமது தேவையை நிறைவேற்றி உம்மை) தேவையற்றவராக ஆக்கிவிட்டான்.
9. ஆகவே, நீர் அநாதையைக் கடிந்துகொள்ளாதீர்!
10. இன்னும், (தர்மம்) கேட்பவரை விரட்டாதீர்!
11. மேலும், (உம்மீது புரிந்துள்ள) உமதிரட்சகனின் அருட்கொடையைப்பற்றி (அவனுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு) அறிவித்துக்கொண்டிருப்பீராக!

அத்தியாயம் : 94

## அஷ்ஷரஹ் _ விரிவாக்குதல்

வசனங்கள் : 8 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) உமது நெஞ்சை உமக்காக நாம் விரிவாக்கவில்லையா?
2. மேலும், உமது சுமையை உம்மை விட்டும் நாம் இறக்கிவிட்டோம்;
3. அ(ச்சுமையான)து எத்தகையதென்றால், உமது முதுகை முறித்து (உமக்குப்பளுவாகி) விட்டது.
4. உமது நினைவை (கீர்த்தியை) உமக்காக நாமே உயர்த்தினோம்.
5. ஆகவே, நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.
6. நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.
7. ஆகவே, நீர் (உலகக் காரியங்களிலிருந்து)விடுபட்டால் (தொழுவதற்கு) நீர் சிரத்தை எடுத்துக் கொள்வீராக!
8. மேலும், உமதிரட்சகன்பக்கம் நீர் விருப்பம் கொள்வீராக!